பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 03 2024 Thursday 6 30 Pm

வணக்கம், ஆல் இண்டியா ரேடியோ, சென்னை - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவித் திட்டம் அவர்களது வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- குடியுரிமை திருத்தச் சட்டம் யாருடைய குடியுரிமையையும் பறிப்பதற்கானதல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.
- ரயில் சக்கரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கும்மிடிப்பூண்டியில் 18 மாதங்களில்செயல்பட தொடங்கும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கான ஊதிய நிலுவைத்தொகையை மத்திய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.
- உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>><<<<

நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவித் திட்டம் அவர்களது வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் சற்றுமுன் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்த திட்டத்தின் கீழ், கடனுதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

கோவிட் பாதிப்பின் போது இந்த திட்டம் தொடங்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக அவர்களின் பொருளாதாரம் பாதிக்கப்படவில்லை என்று அவர் கூறினார்

இந்த திட்டத்தின் மூலம் நடைபாதை வியாபாரிகளின் வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் நடைபாதை வியாபாரிகள் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு இந்த திட்டம் பேருதவியாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

முந்தைய ஆட்சிக்காலத்தில் நடைபாதை வியாபாரிகளுக்குத் தேவையான எந்தவொரு உதவியும் செய்யப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

குறைந்த வட்டியில் அவர்களுக்கு கடனுதவி கிடைப்பதற்கு இந்த திட்டம் உறுதுணையாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் மூலம் நாடுமுழுவதும் ஒரு லட்சம் பயனாளிகளுக்கு இன்று கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக இந்த தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது அன்றாட வாழ்வில் நடைபாதை வியாபாரிகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் பிரதமர் கூறினார்.

>>>><<<<

குடியுரிமை திருத்தச் சட்டம் யாருடைய குடியுரிமையையும் பறிப்பதற்கானதல்ல என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த சட்டம் குடியுரிமை வழங்குவதற்கானது என்று தெளிவுபடுத்தினார்.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானிலிருந்து வந்த இந்து, புத்த, ஜெயின், சீக்கிய, கிறிஸ்தவ மற்றும் பார்சி சமுதாயத்தைச் சேர்ந்த அகதிகளுக்கு குடியுரிமை வழங்க இந்த சட்டம் வகைசெய்கிறது என்று அவர் தெரிவித்தார்.

இந்த சட்டம் குறித்து சிறுபான்மையினர் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனை அரசியலாக்கக் கூடாது என்றும் திரு. அமித் ஷா கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

இரும்பு அச்சுமுறை மூலம் ரயில் சக்கரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கும்மிடிப்பூண்டியில் ஏற்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த 18 மாதங்களுக்குள் இந்த தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கும் என்று கூறினார்.

ஆண்டுக்கு இரண்டரை லட்சம் சக்கரங்கள் இதில் உற்பத்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் சக்கரங்கள் ஏற்றுமதி செய்யப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கான தேர்தலை ஒரே நேரத்தில் நடத்துவதற்கு 32 அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு, 47 அரசியல் கட்சிகளிடம் கருத்துகளை கோரியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக 21 ஆயிரத்து 588 பேர் கருத்துக்களை தெரிவித்துள்ளதாகவும், இதில் 80 சதவீதம் பேர் இந்த முறைக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ஆம் தேதி அமைக்கப்பட்ட முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தலைமையிலான இக்குழு, 191 நாட்கள் தங்களது ஆய்வினை மேற்கொண்டு, 18 ஆயிரத்து 626 பக்க அறிக்கையை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவிடம் இன்று சமர்ப்பித்தது.

>>>><<<<

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கான ஊதிய நிலுவைத் தொகையை மத்திய அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

நடப்பு நிதியாண்டில் தமிழகத்திற்கு ஆயிரத்து 22 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியத் தொகை வழங்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதைத் தவிர, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கடைசி வாரத்திலிருந்து திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் வழங்கப்படாததால், அதற்கான பொறுப்புத் தொகையும் ஆயிரத்து 678 கோடி ரூபாயாக சேர்ந்துள்ளதாக திரு. மு.க.ஸ்டாலின் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் கொப்பரை தேங்காய் கொள்முதல் இன்று தொடங்கி, ஜூன் மாதம் 10ஆம் தேதிவரை நடைபெறும் என்று வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், உளுந்து மற்றும் பச்சைப்பயறும் குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, தென்னை, உளுந்து, பச்சைப் பயறு பயிரிட்டுள்ள விவசாயிகள், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை அணுகி, தங்களுடைய பெயர்களை உரிய ஆவணங்களுடன் பதிவு செய்து பயனடையுமாறு அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

>>>><<<<

வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று குவஹாத்தியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், இதுவரை இல்லாத அளவிற்கு இந்த மாநிலங்களில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மத்திய அமைச்சர்கள் 850-க்கும் மேற்பட்ட முறை வடகிழக்கு மாநிலங்களை பார்வையிட்டு, வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆய்வு செய்ததாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>><<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் போதைப் பொருள் புழக்கம் அதிகரித்து விட்டது என்ற உண்மையை கூறியதற்காக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், தம்மீது அவதூறு வழக்கு தொடுத்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுபோன்ற நடவடிக்கைகள் காரணமாக, பிஜேபியின் குரலை முடக்கும் முயற்சி வெற்றிபெறாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திமுக அரசின் செயல்பாடுகள் குறித்த விமர்சனம் தொடரும் என்றும் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு உரிய தேதியில் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் திரு. வெங்கடேசன் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்போது உரிய தேதியில் ஊதியம் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

தூய்மைப் பணியாளர்களுக்கான சீருடை, பாதுகாப்பு உபகரணங்களை, ஒப்பந்ததாரர்கள் 10 நாட்களுக்குள் வழங்க வேண்டும் என்றும் திரு. வெங்கடேசன் தெரிவித்தார்.

>>>><<<<

சென்னை விமான நிலையத்தில், சிறப்பு பாதுகாப்பு ரோந்துப்படை இன்று முதல் செயல்பட தொடங்கியுள்ளதாக மாநகர காவல்துறை ஆணையர் திரு. சந்தீப்ராய் ரத்தோர் கூறியுள்ளார்.

இன்று இந்த சேவையை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - ரத்தோர் 48 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

புதுக்கோட்டை மாவட்டம், பாத்தம்பட்டியில் 5 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றியினை மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசினர் கலைக் கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

>>>><<<<

வேலூர் மாவட்டம், காட்பாடியில், மாநில அரசால் தடை செய்யப்பட்ட 605 கிலோ குட்கா மற்றும் பான்மசாலாவை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

>>>><<<<

ராமநாதபுரம் மாவட்டத்தில் முத்ரா கடனுதவி திட்டத்தின் கீழ், 94 பயனாளிகளுக்கு கடனுதவிகளை ஆட்சியர் திரு. விஷ்ணு சந்திரன் இன்று வழங்கினார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை பாரா துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்புக் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>><<<<

ஸ்பெயினில் நடைபெற்ற பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் பிரிவில் Bhavina Patel தங்கப்பதக்கத்தையும், Sonalben Patel வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

>>>><<<<

சிங்கப்பூர் Smash டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சரத் கமல் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் எகிப்தின் Omar Assar –ஐ வென்றார்.

>>>><<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>><<<<

இந்தூரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>END<<<<